ஓலை 44 | ஓசை 152 | மடங்கல்(ஆகத்து) 2023

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# வாழ்வியலும் வள்ளுவமும்



**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்.**

எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒருத் தன்மையானதே, ஆயினும் செய்கின்ற தொழில்களின் உயர்வு தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை.

**Translation:**

All men that live are one in circumstances of birth;
Diversities of works give each his special worth.

**Explanation:**

All human beings agree as regards their birth but differ as regards their characteristics, because of the different qualities of their actions.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில் இணைய-9597887847

# அகர முதல

## இலக்கியப் பேரவை

அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!

### நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

### இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

### வடிவமைப்பு

அ.வில்சன்


### அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# ஓலைச்சுவடி

மனித உணர்வுகளை
பதமாக எடுத்துக்கட்டி
எழுத்தாணி கொண்டு
பொறிக்கப்பட்ட ஓலைச்சுவடி!
திகட்டாத தேன் தமிழின்
பெருமைகளை உலகுக்கே
விளக்கிச் சொல்லும்!
முதல் இடை கடை என
சங்ககாலம் கடந்து இலக்கியங்களையும்
காப்பியங்களையும்
மொழியின் இலக்கணத்தையும்
வரலாற்றையும் தாங்கி நிற்கும்
எழுதப்பட்ட ஓலைகளின்
தொகுப்பே ஓலைச்சுவடி!




கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.11

# ஹைக்கூ

சீவும் கத்தி
பென்சில் மேல் அமர்கிறது
சிட்டுக்குருவி

வேலி முள்
தெய்வீகமாக காட்சியளிக்கிறது
வீட்டுத் துளசி

தட்டான் சிறகுகள்
பயணித்துக்
கொண்டேயிருக்கின்றன
தொடுதிரை விரல்கள்



கவிஞர் அன்னலெட்சுமி சரவணன்,ஈரோடு



அகர முதல

# எம்மதமும் மனிதனுக்கே


தேவன் வாழ யாகம் செய்வதை விட
மனிதன் சாகாமல் போக
சாதம் செய்யுங்கள்.
இறைவன் கண் பார்க்க
அபிஷேகம் செய்வதை விட
இருப்பவன் கண் மூடாதிருக்க
பால் ஊற்றுங்கள்.
கடவுள் வரம் வேண்டி
வேள்விகள் நடத்துவதை விட
மனிதன் கரம் ஏந்தாது
மாற்றம் செய்யுங்கள்.
அள்ளிக்கொடு என அல்லாவிடம்
இறைஞ்சுவதை விட
அல்லல்படும் ஏழைக்கு உதவுங்கள்
மதம் மனிதன் வாழத்தானே.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# இருநெஞ்சமும்!

குளிரில் உலாவும் நிலவு போலும்
உன் முகத்திலே களிகொண்ட கயல் மீன் போல
கண்கள் பிறழ அற்றிருக்குமோர் காட்சியினை
யாண் கண்டு இன்பமுற
காற்றிலே கார்குழல் கலைந்தாட
கூந்தலிடையே தேனிறைந்த
மலர்களையணிந்தே காதல் மணம் வீச
கன்னியிவள் இடை கண்டு கமம் விளைந்திட
விளைந்த கமம் தணிந்திட
செவ்வரிதழ் கொண்டு முகம் தழுவிட தழுவிட
சிவந்ததென் கன்னம்.
நாணமுடைந்து பேசிநின்ற அப்பொழுதினிலே
இன்புற்றதே இருநெஞ்சமும்!



கவிஞர் ச.இராஜ்குமார்,திருப்பத்தூர் மாவட்டம்

# மகளே! வெளியே வா!

தனக்காக வாழாது
பிறர்க்காய் வாழ்கிறாய்.

உனக்காக வாழ்ந்திட
கணக்காய் முடிவெடு.

தன்னம்பிக்கை என்னும்
துடுப்பு ஏந்தி

வாழ்க்கைப் பயணத்தை
வாகாய்க் கடந்திடு.

போற்றுவோரைக் கண்டு
நாளும் மயங்காதே.

தூற்றுவோரை என்றும்
இகழ்ந்து வெறுக்காதே.

தோல்வியைக் கண்டு
அஞ்சி முடங்காதே.

வெற்றியைக் கண்டதும்
பெற்றமாய்த் துள்ளாதே.

நிலையாமை நிலைத்த
நில்லாத உலகமிது.

நீடித்த புகழொடு
மறைந்தும் வாழ்ந்திட



சாதனைகள் செய்தே
வேதனைகளை வெளியேற்றிடு.

உன் திறமைகளை
உலகறியச் செய்திடு.

உன்னை மட்டும்
உணர்ந்தே உய்ந்திட

உலகோர்ப் போற்றிட
உன்னதமாய் வாழ்ந்திட

உயர் குறிக்கோளினை
உவந்தே கொண்டிடு.

பலருக்கும் சான்றாக
பல்லாண்டு வாழ்ந்திடு.

கவிஞர் செ.கலைவாணி,மெல்பேர்ன்

# பழக்கம்

வழக்கமாக காக்கைக்கு
உணவு வைத்து விட்டு
உண்பது என் பழக்கம்.
இன்று பலமுறை அழைத்தும்
வரவில்லை காகம்.
தம்பி மகளுக்கு
இன்று வளைகாப்பு
பேத்தியை வாழ்த்தி விட்டு
அப்படியே
அங்கு விருந்துண்டு மகிழ
சென்றிருக்கலாம்
அம்மாவும் அப்பாவும்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# நிரந்தரமாய்

உன் ஜீவிதத்துள் சந்திப்புகள்
பலவாறு இருக்கும்
ஒரு காலம் வரும்
சில மனிதர்கள் வருவார்கள்
உனது இதயத்தினுள் நுழைந்து
உன்னை ஆட்டி வைப்பார்கள்
உனது புத்தி
உனது உள்ளம்
உனது ஆன்மா
எல்லாவற்றிலும் பரபரப்பை ஏற்படுத்திச் செல்வார்கள்
உனக்குள் ஏதோ ஒரு சுடர்
உனக்குள் ஏதோ மின்னல் கீற்று
உனக்குள் ஒரு சுகந்தக்காற்று
உனக்குள் ஒரு அடைமழை
உனக்குள் ஒரு ஆனந்த தாண்டவம்
உனக்குள் ஏதோ ஒரு மாற்றம்
உனக்குப் பிடித்தமாய் ஏதோ ஒன்று
மாறி மாறி உனக்குள் நிகழும்
மாறி மாறி உனக்குள்ளவை அதிசயங்கள் நிகழ்த்தும்
இவர்தாம் இவர்களேதாம்
பின்னொரு பொழுதில்
உன் வாழ்வின் நிரந்தர மகிழ்ச்சிக்கு
அல்லது
உன் வாழ்வின் நிரந்தர வடுவிற்கு
காரணமாக இருக்கக்கூடியவர்கள்
இன்னும், சரி பிழை என்ற
ஜென்ம அளவுகோலுக்கு அப்பால்
முற்றும் துறந்த, எல்லாம் மறந்த
உன் வாழ்வின் சுவடுகளில்
சலித்து வெறிச்சோடிய இருளின் பாதையில்
எந்தப் புள்ளியிலும் எந்த அகழியிலும்
உன்னையவர்கள் ஞாபகப்படுத்திக்கொண்டே இருப்பர்.



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# நான் முதல்வரானால்

தமிழோடு உறவாடி
தாய்மண்ணோடு விளையாடும்.
மண்ணின் மைந்தனுக்கே
மண்ணுலகில் முன்னுரிமை.

பூரண மதுவிலக்கு
பூரணமாய் விளங்கிட.
புத்துயிர் கொடுப்பேனே
புதுச்சட்டம் படைப்பேனே.

பெண்மையின் மென்மையை
கசக்கிடும் கயவருக்கு.
கழுமரம் ஏற்றியே
காளனுக்கு படைப்போமே.

சாதியில்லா சமுதாயத்தை
சரித்திரத்தில் படைத்திட.
சாதியில்லா சான்றிதழை
சாமானியர்க்கும் கொடுப்போமே.

கரைந்தோடும் கனரகமும்
பறந்தோடும் வாகனமும்.
பாதைகள் வகுத்திட
புதுவிதிகளை புகுத்திடுவோம்.

ஏழையில்லா விவசாயம்
ஏராளமாய் விளைந்திட.
ஊக்கத்தை அளிப்போமே
ஊக்கத்தொகை கொடுப்போமே.



மண்ணின் மலட்டினை
மாறாத விவசாயம்.
படைப்போர்க்கு வழங்கிடுவோம்
பாரிலே உயர்த்திடுவோம்.

குழந்தையில்லா தொழிலகத்தை
குமரியிலே படைத்திடுவோம்.
விலையில்லா கல்வியினை
வீதிதோறும் கொடுத்திடுவோம்.

ஏராளம் சீர்திருத்தம்
ஏணியாய் ஏற்றிடுவோம்.
ஏழையின் பங்காளனாய்
என்றென்றும் இருந்திடுவோம்.

கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# பொச்சாவாமை

(அதிகாரம்-54)




நினைவுகளும் மறதிகளும்
மனதின் பெருமகிழ்ச்சி.
நிறைமகிழ்வால் பெறும்மறதி
வரம்புகடந்த சினத்திலுந்தீதே.

தினம்பெருகும் வறுமை
ஒருவனுக்கு அறிவுகெடுக்குமாப்போல்.
மறதித்துன்பமது அழியா
புகழைக் கெடுத்துப்போடும்.

மறதியில் சோர்வோர்
புகழுக்குத் தகுதியிலார்.
அஃதவர்க்கு எவ்வகைநூலோர்க்கும்
ஒப்பமுடிந்த முடிவுபோலாகும்.

நெஞ்சத்துள் அச்சமுடையோர்க்கு
அரணிருந்தும் பயனிலாப்போல்.
பொச்சாப்புடையோர்க்கு எத்தகை
தனமிருந்தும் பயனொன்றுமில.

எதிர்வரும் இடையூறை
முன்னறிந்து காக்கமறப்போன்.
உயிர்கொண்டு போகையில்
தன்பிழையால் கலக்கமுறுவான்.

எவரோடும் எக்காலமும்
மறதியால் சோராதிருத்தல்.
உயர்நன்மை தருமதுபோல்
வேறேத்தன்மை நன்றில்லை.

மறவாமை எனுங்கருவியால்
பிறழாது செயல்முடித்தால்.
அரிதானதுபோல் கருதி
கைவிடும் செயலிங்கில்லை.

சான்றோர்சொல் நற்செயல்கள்
மறவாது புரிந்திடல்நலம்.
பொச்சாப்பால் கைவிடின்
எழுபிறப்பும் நன்றில்லை.

பெருமகிழ்வின் செருக்கால்
கடமைமறப்பின் அத்தகையால்.
சீரழிந்தோரை சிந்தித்தல்
கோமகனுக்கு அழகு.

எண்ணியது மறவாது
இடைவிடாது நினைந்திடின்.
திண்ணமாயதை கருதியடைதல்
எளிதாம் ஒருவனுக்கு.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# நிலவுக்குத் துணை நிலவே

இப்பொழுது நிலவும் பூக்களும்
ஆடையைத் தேடியோடும் அவலம்
வடகிழக்கு இந்தியமண்ணிலும்
வாளோடுப் பிறக்கட்டும்
கோடி வேலுநாச்சியார்கள்.



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,சென்னை

# எனது இரவு!

நினைவுகளை தந்த உன்னால்
என் அருகில் இருக்க முடியவில்லை
அருகில் நீ இல்லாத தவிப்பு
என்னைத் தவிர வேறு யாராலும்
அறிய முடிவதில்லை
உடல் சோர்வும் தூக்கமும்
என்னை சூழ்ந்து கொள்ள
உந்தன் நினைவுகளுக்குள்
நான் சிக்கிக் கொண்டேன்
என்னால் தூங்கவும் முடியவில்லை
என் தூக்கத்தை கலைக்கவும் முடியவில்லை
எனது ஒவ்வொரு இரவிலும்
தூக்கத்தை தொலைத்த மின்மினியாய்
உன் நினைவலைகளுக்குள்
மின்னிக் கொண்டிருக்கின்றேன்
ஆழ்ந்த தூக்கத்தை நான் சுவைத்து
பல மாதங்கள் ஆகிவிட்டன
அதற்குக் காரணமும் நீதான்
என் காவியமும் நீதான்
என் தூக்கத்தை திருடியவனே
கனவுகள் பிறந்திடும் எனது தூக்கத்தை
மீண்டும் என்னிடம் கொண்டு வந்து சேர்த்து விடு



கவிஞர் அகிலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# கண்ணே இனி கசியாதே

பத்து மாதம் சுமந்து பெற்று
வளர்த்து ஆளாக்கிய தந்தையின் அன்பில்
ஆனந்தம் அடைந்தாள் ஒவ்வொரு நாளும்
இரவு பகலாய் ஓடி உழைத்து
மகளுக்காக சிறுக சிறுக சேமித்து
வயித்தைக் கட்டி வாயைக் கட்டி
குருவி சேர்த்ததுப் போல சேர்த்து
சேர்த்த பணத்தில் திருமண நிகழ்வை
நடத்த ஊரே அழைக்கையில் பெற்றவன்
மனம் ஆனந்தம் அடைய மகளே
மண மேடையில் ஆனந்த கண்ணீர்
மங்கல வாத்தியங்கள் எல்லாம் முழங்க
கெட்டி மேளத்துடன் பூக்கள் எல்லாம்
தூவி அனைவரின் ஆசீர்வாதமும் கிடைத்தது
புகுந்த வீட்டிற்கு செல்கையில் மகள்
தந்தையைப் பார்க்க கண்ணே இனி
கசியாதே நான் பார்த்த இடத்தில்
நின்று உனக்கு எல்லாவற்றையும் ஒருங்கே
செய்து வழி நடத்துபவன் கணவன்
என தந்தை ஆறுதல் படுத்தி
வழியனுப்பி வைக்கிறாள் மணவாளன் வீட்டிற்கு.



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்



நாட்டில் சொல்ல முடியாத
துயர பின்னணி ஏராளம் ஏராளம்
எதைத்தான் எடுத்து உரைப்பது
அதை எதிர்த்து உரைப்பது
புரியவில்லை இப்புண் பட்ட மனதில்
நெஞ்சம் கலங்குதே

காணக்கூடாத காட்சிகளை கண்டு
வரலாற்றில் இன்று.
கொடுமை கோடி கணக்கில்
ஏன் இந்த நஞ்சக பூமியில் ?
நாளும் நயம் இல்லாமல்
நிலமும் பிழையில்லாமல்
பிச்சை எனும் ஏட்டில்
இந்த தமிழ் நாட்டில்

யாருக்கு உதவப் போகிறது
அந்த உபயம்
நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்
சாவை தர போகிறது
இந்த புதிய உதயம்
நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்

கிள்ளிய நொடியிலே
வெந்து தவிக்கிறது இந்த நிலை
வளர்த்த பிள்ளை வளம் இல்லாமல்
நிலம் இல்லாமல் இன்று

உயிருக்கு இணையே இந்த பயிர்
இதுவே பல உயிர்களுக்கு துளிர்
சிக்கித் தவிக்குது அன்னிய நாட்டின் அரங்கத்தில்
இந்நிலம் நிறம் மாறி.

தீர்க்க முடியாத தீர்ப்பும்
தீர்ந்து போனது நீதித்துறையில்
சொல்ல முடியாத துயரங்களும்
கண்ணீர் வடிக்கிறது விவசாயத் துறையில்

நாளை உலகமே தவிக்கப் போகிறது
பசி என்னும் நிலையில்
யாருக்கு உதவி யாருக்கு உதவி இந்த
நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்
இந்நிலத்திற்கே விலை பேசி வீணானதே சாட்சி.

நெஞ்சம் கலங்குதே

எங்கள் வியர்வையின் நீர்த்துளிகள்
விஷம் ஆகி உயிர் நீக்கத்தில் தினம் தினம்
ஆட்சிக்கும் ஆதங்கம் இல்லை
பல காட்சிக்கும் ஆதங்கம் இல்லை இந்நாட்டில்.

யார் வைத்த வடு
எங்கள் நிலம் சோறு போட்டதே சுவடு
கண்ணீர் வடிக்கிறதே என் பயிர்களும்
உயிரில்லாமல் உருவத்தை மட்டும் கொண்டு
எதிர்ப்போம் உயிர் துறப்போம்!
விவசாயம் பார்ப்போம்!
பயிர் காப்போம்!

கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# உடையாத பிம்பம்

இக்கணம் வரை
செய்தேன் பெற்றேன்
கோவத்தில் சொல்லிகாட்டிவிட்டாள் அக்காள்
அவசர உதவிக்கு அள்ளிக் கொடுத்தவன்
ஆரோக்யமான உறவின்மையால்
சொல்லிகாட்டிவிட்டான் அண்ணன்
வயதிற்கேற்ப சம்பாத்தயமில்லை
வாயில் ஒட்டிய பருக்கை வரை கோவத்தில்
சொல்லிவிட்டார் அப்பா
அத்தனையும் அறிந்து
அடுத்த வேளை பசிக்குமென
உணவை பரிமாற தயாராகிறாள்
அம்மா
உறவு கசப்பிலும்
உணவு இனிக்கதான் செய்கிறது.



கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# பத்தாம் வகுப்பு தோழமைகள்

எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்த
எங்கள் விண்மீன் கூட்டம்
அன்று ஒருநாள் கூடி மிளிர்நதது
ஆறாம் வகுப்பு என்னும் பள்ளி வானில்
ஐந்துவருட தொடர்கதையாய்
இன்றும் பயணிக்கிறது
எத்தனை எத்தனை சண்டைகள்
எண்ணிலடங்கா மகிழ்வு தருணங்கள்
சொல்ல முடியாத சொற்களும்
உணர்த்தமுடியாத உணர்வுகளும்
நெஞ்சில் நிறைந்த எதிர்கால கனவுகளும்
எண்ணிப்பார்க்கையில்
இழைத்த புன்னகையாகிறது
இன்றைய சூழல்களில்
இருந்துவிட்டு போகட்டும் கசப்பும் கார்ப்பும்
அரும்புவிட்டு மலரட்டும்
அன்பும் ஆனந்தமும்



கவிஞர் பெ.தனலட்சுமி,ஈரோடு


# கருப்பும் வெள்ளையும்

கருப்பு எழுத்துக்கள்
வெள்ளை பக்கங்களிலே

கருப்பு கேசம் இளமையிலே
வெள்ளை கேசம் முதிர்வினிலே

கருப்பு வானின் பேரழகிலே
வெள்ளை நிற மதி ஜொலிப்பிலே

கருப்பு விழி உருளுமே
வெள்ளை படலத்தின் மீதினிலே



கருப்பு சாலைதனிலே
வெள்ளை விதிமுறைகளுமே

கருப்பு சிலைதனிலே
வெள்ளை ஆடை மிளிர்கிறதே

கருப்பு பலகைதனில்
வெள்ளை சொற்கள்

கருப்பு இளம் கேசத்திலே
வெள்ளை முதிர்வு கேசம் படருதே

கருப்பு மரக்கறியிலே
வெள்ளை சாம்பல் தூள்களே

கருப்பும் வெள்ளையும் கலந்தால்தான்
கலைவண்ணமும் ஜொலித்திடுமே!

கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# ஓய்வு எப்போதோ?

தினம் தினம்
ஓடும் அவள்
ஓட்டங்களுக்கு
ஓய்வு எப்போதோ?

நகைக்கும் அவள்
புன்னகைக்குள்ளே
புதைந்து கிடக்கும்
வலிகளை யாரறிவாறோ?

வலிகளை மறைத்து
வளியதை நாசியோ
சுவாசித்திடும் வரை
வழிகளை தேடியே
ஓடுகிறதே அவள் பயணங்கள்.

மறைக்க முயல்கிறாள்
ஆனால்
மறைத்திடத்தான் முடியுமா?
காட்டிக் கொடுக்கின்றனவே
அவள் சூழ்நிலைகளே.
ஈன்றவளின் துயரங்களோ
சிறுசுகளுக்கு புரிந்திடுமா?

கனந்த மனதுடனே
கடக்கிறாளே காலங்களை.
கையிலிருப்பவளோ
கரைசேர்த்திடுவாளா?
காத்திருப்போடு முயல்கிறாளே
ஏழைத் தாயவளே.



கவிஞர் அறூபா அஹ்லா,கல்முனை (இலங்கை)

# சிலப்பதிகாரம் (மூன்று)

கோவலன் கண்ணகியை போற்றிப் புகழுதல் ( தொடர்கிறது )
"மாசறு பொன்னே ! வலம்புரி முத்தே
காசறு விரையே ! கரும்பே ! தேனே!
அரும்பெறல் பாவாய் ! ஆருயிர் மருந்தே !
பெருங்குடி வணிகன் பெரு மட மகளே !"

மலைகளில் தோன்றாத மாணிக்கம் நீ
அலைகளில் கிடைக்காத அமிழ்தம் நீ
கலையாத இசையில் யாழ் போன்றவள்
நிலையென புரளும் கூந்தலை உடையவள்

தனிக் குடித்தனம் அமர்த்தினார்கள் கோவலன் பெற்றோர்
தனி மாளிகை, பணியாளரகள், குறையாத செல்வம்
இனி என்ன சொல்ல, இன்பங்களை துய்த்து வாழ்ந்தனர்
பனிமலர் இதழில் மயங்கிய வண்டு நினைவற்று மகிழ்ந்தது '

3. அரங்கேற்று காதை (கோவலன் பாதை மாறுதல்)
ஐந்தாம் வயதில் நாட்டியக் கலையைப் பயின்றாள் மாதவி
பைந்தமிழ இலக்கண விதிப்படி ஏழு ஆண்டுகள் கற்றாள்
செந்தாமரை மாதவி ஈராறு வயதில் அரங்கம் ஏறினாள்
வஞ்சி நாடன் 1008 கழஞ்சு பொன்மாலை பரிசு தந்தான்




நடனக் கலை ஆசான் சிறப்பு
இருவகை ஆடலும் பாடலும் அறிந்த வல்லுனன் அவன்
பலவகை கூத்தும் யாழிசை, குழலின் இசை, அறிந்தவன்
உருபொருளாய் ஏற்றம் இறக்கம் முகபாவம் தெரிந்தவன்
சிருங்கார இசை விற்பன்னராக ஆசிரியர் விளங்கினான்

மாதவி ஆடும் அரங்கம்
சிற்பக் கலை விதிமுறைகளின்படி அரங்கம் அமைந்தது
அற்புதமான நான்கு தூண்களில் மேற்கூரை நின்றது
பொற்பாதங்கள் ஆடும் மேடை முத்து, மலர் மாலை கோவை
கற்பகச்சோலை போல் அலங்கரிக்கப்பட்டிருந்தது

மாதவியின் அரங்கேற்றம்
அரங்கில் அரசர், அமைச்சர்கள் அவரவர் இருக்கையில் அமர,
தர வரிசையில் இரண்டாவது அறிஞர்கள், ஞானிகள் புலவர்கள்
வரமாக வந்தார்கள். சீமான்கள் செல்வந்தர்கள் , வணிகர்கள்,
சரமாரியாக வந்த பொதுமக்கள் அடுத்தடுத்த வரிசைகளில்

இசைக்கருவி கலைஞர்கள், பாடும் பெண்கள் வரிசையாக நிற்க
அசையாத கண்கள் மாதவியைக் கண்டு மயங்கி சல்லடையாக
இலைப்பூங் கோதை இயல்பினில் இனிது நடனம் ஆடி முடித்தாள்
விசயன் சேரன தலைக்கோல் பட்டம்,1008 கழஞ்சி பொன் தந்தான்

கோவலன் மாதவியை சார்தல்
மாதவியின் தாய், சித்திராபதி கூனியின் மூலம் வீதிதோறும் அறிவித்தாள்
சாதகமாக 1008 கழஞ்சி மாலையை வாங்குவோர் மாதவியைப் அடையாளாம்
பாதகமாக அழகில் மயங்கிய கோவலன் அவளுக்கான விலை கொடுத்தான்
சோதனையான விதிப்படி அவள்மீது மையலுற்று அவள் பின் சென்றான் .

.... தொடரும்

கவிஞர் ந.திருக்காமு

# புதைக்குழி

தோண்டத் தோண்ட
அகல மறுத்தன ஒட்டிப் பிடித்த
உத்தம பூமியின் உதிரும் மண்களும்
செங்கண்ணீர் வடித்தவாறே
அவை உரத்துக் கூறின
நிர்வாணமாக்காதீர்
எம்மவர் எலும்புக் கூட்டைக்கூட

வெள்ளிச் சங்கிலி வெளிற மறுத்து
நெஞ்சு எலும்பைச் சுற்றிக்கிடந்ததால்
என் கணவன்தான் என்று
கண்மூடிச் சாய்ந்தாள்
காத்திருந்த ஓர் மனைவி

தொலைத்த உறவுகளை தேடும் குரல்களின்
ஏக்கம் குழைந்த எண்ணங்களில்
அண்ணாவா இருக்குமோ அக்காவா இருக்கு மோ
தம்பியா இருக்குமோ தங்கையா இருக்குமோ
அப்பாவா இருக்குமோ
ஏன் பால்மா கொண்டு வருவன் எனக்
கடைசியாய்ச் சென்ற எங்கட அம்மாவா இருக்குமோ
பாருங்கோ அண்ணா
பால்மா கொட்டுப்பட்டுக் கிடக்கோ எண்டு ?
புரிதலற்ற ஒரு புதல்வியின் வினாவிற்குக்
கண்ணீர் வடித்து புதைகுழி நனைத்தன
பல கண்கள்

உதிரம் குடித்து சதைத்துண்டம் தின்று
கந்தகம் முகர்ந்து பிஞ்சுடல் மொய்த்த
கழுகுகள் அறியாது கதறும் உறவுகளின்
மரிக்க மறுக்கும் வலிகளை


தோண்டத் தோண்ட வெளிவரும் அளவில்
கண்ட இடத்தில் புதைத்துச் செல்ல
கழிவாய்ப் போனதோ
மொழி ஒன்று மாறிய இனத்தின் மரணம் ?
விழியற்ற உலகில் வினவுவது யாரை?



**கவிஞர் குகதா**

# அச்சாணி

என் இதயதுடிப்பின் இயக்கமாக இருந்து,
என்னை இயங்க வைப்பதே - நீதான்.
என்னுடைய அனைத்து செயல்களிலும்,
இயக்க செயலாக நீ இருப்பதால்,
நீயே - என் வாழ்வின் அச்சாணி.



கவிஞர் பெ.சுரேகா,திண்டுக்கல்

# வேலியே பயிரை மேயாதே

பயிரை காக்க வந்த வேலி
பயனுள்ளதாய் இருக்க நினைத்த வேலி
பல போராட்டத்தில் உருவான பயிர்கள்
பலரோடு உழைப்பால் செழிப்பான நிலம்.

வியர்வை சிந்தி முத்தாக்கிய கனிகள்
விளைக்க இரவு பகலாய் பாடுபட்டே
விடியில் தருமென கனவுகள் கண்டே
விடியாப் பொழுதுகளாய் நாளும் தேய்ந்தே.

சுடும் சூரியன் காலை சுட்டிட
சுட்ட புண்ணோடு நிலத்தினை பண்படுத்தி
சுற்றி பாதுகாத்திட வேலியிட்டு
சுற்றிலும் போட்ட வேலியை நம்பியே.

கண்ணுரங்க செல்கின்ற உழைப்பாளி இங்கே
கல் மனது வேலிக்கு வந்ததோ
கல்லாகித்தான் வினை செய்ய நினைக்கிறதோ
கலங்கடிக்க தந்திரம் தான் செய்கிறதோ.



பாவம் என்ற வண்ணம் இல்லையோ
பாவப்பட்ட உழைப்பாளியை நினைக்கவில்லையோ
பாடு பட்ட நெஞ்சத்தை எண்ணாதோ
பாழாக்கி விடுகிறதே நம்பிக்கைதுரோகி வேலியோ

கவிஞர் ஜஸூரா ஜலீல்

# பிறைத்துளிகளாய் எனை சேர

எதிர்ப்பாரா கணத்திலே
கன்னம் தீண்டும் அதரங்களாய்.
மண்ணைத் தீண்டும் மாரியவன்.

சாரலாய் சாளரம் வழி எனை வருடியே
என் பிடியில் சிக்க ஆவலாய் அழைக்கும்
திவலைத் துளிகள்.

கொளுத்தும் கதிரோனின் தாகம்
தணிக்க சொல்லாமல் வந்து நின்றாயோ?
கனிந்த அகத்தை உன் வசமாய்
இழுக்க இத்தனை அழகாய் எனை தீண்டினாயோ?

புள்ளின் நுனி உனைத் தாங்கி நிற்க
அவனியின் அழகில் எனை மறந்து நிற்க
அங்கம் நழுவி தேகச்சூட்டில் குளிர் காய்கிறாயா?
எண்ணங்களில் வதைத்த அகத்தை
உன் வசத்தில் மாயமாய் மறந்தே.
நகைத்து நடனமாடும் மயிலைப் போல
தோகை விரித்த காரிகையை இரசிக்க வந்தவனே

எனை நீங்காது
என் கரங்களில் அடங்கிட வேண்டாம்.
அகத்தில் நிறைந்திடு அது போதும் ஆசாரமே.
பிறை அவனும் சிகரமாய் எனை அடைவான்
என்றே மடிகிறேன் என்னவன் மடிதனில்.

கவிஞர் ச.கார்த்திகா

# ஒழுக்கமுடைமை

## ஒழுக்கமே உயர்வு (அதிகாரம் 14)

உயிரினும் மேலானது ஒழுக்கம்
வாழ்தலின் வரைமுறை ஒழுக்கம்

இதை பற்றுடன் ஏற்றுக்கொண்டு
அதன்படி நடப்பதே ஒழுக்கம்.

என்றென்றும் துணை இருப்பது
மெய்யும் ஒழுக்கமுமே.

நல்ல குடும்பம் அமையத் தேவை ஒழுக்கம்
இழுக்கம் (ஒழுக்கமின்மை) பிறப்பையே குன்று வைத்து விடுமே

எந்த நிலையிலும் உலகம் ஒருவரை ஏற்றுக் கொள்ளலாமே
ஒழுக்கம் இல்லாதவனை உலகம் ஏற்காதே

அகத்தில் கெட்ட எண்ணம் உள்ளவருக்கும்
ஒழுக்கமில்லாதவனுக்கும் என்றென்றும்
வாழ்வில் வளர்ச்சி ஏது ?

நல்லொழுக்கம் தவறாதவர் உன்னதமானவர் உயர்வானவர்
நன்றியுணர்வு கொண்டவர்கள்

தவறியும் இவர்களின் நாவிலிருந்து
தகாத வார்த்தைகள் வராதே

ஒழுக்கம் இல்லாதவரோ துன்பத்திற்கும்
தீராத பழி சொல்லுக்கும் ஆளாவாரே

பல அற நூல்களை கற்றும் உலகோடு ஒத்திசைத்து
ஒழுக்கம் கொண்டு வாழவில்லை எனில்
கற்றிருந்தும் அறிவில்லாதவர்களே!




கவிஞர் சுமதி தசரதன்,சென்னை

# நாத்திகன்

சமய சம்பிரதாயங்களையும்
சடங்குகளையும்
முற்றிலும் தவிர்த்திடும்
முற்போக்குத் தோழனின்
வீட்டுக்குள் கணத்த
இதயத்தோடு நுழைகிறேன்.

அறையெங்கும் மணக்கும்
ஊதுபத்தி
வீடெங்கும் வாசம் வீசும்
வண்ணமலர்களென
ஒவ்வொன்றும்
பெரும் அமைதி
நிரம்பிய வீட்டிலிருந்து வெளியேறிய மனம்.

இத்தனை நாட்களாய்
நாத்திகனாய்
தவிர்த்த சடங்குகளையும்
சம்பிரதாயங்களையும்
தவிர்க்காமல் செய்கிறது
ஆன்மீகத்தில் பழுத்து உதிர்ந்த
அப்பாவின்
கடைசி ஊர்வலத்தில்.



கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# நிறம் மாறிய நெய்வேலி

கனவை சுமந்து வேளாண் மக்கள்
அறுவடை நோக்கி காத்திருக்க!
மரத்தை துளைக்கும்வண்டு போல்
விளை நிலத்தை கீறும் அரம்பர்!

இயற்கை உமிழ்ந்த கரி
நீர் ஊற்று தடம் அறுத்து
காற்றை நஞ்சாக்க திரித்து
நீண்ட துயரத்தை தருகிறது!

உணவு களஞ்சியம் உருக்குலைந்து
உவரி காடாக நிற்கிறது!
நெய்வேலி நிறம் மாறி
நிற்கிறது !




கவிஞர் செ.தமிழ்நேயன்

# கனவா நனவா

கனவோடு சில நாள்
நினைவோடு சில நாள்
நானும் நீயுமாய் சேர்ந்தே
கண்டது கனவு தானா- இல்லை
கனவாய்ப் போன நனவு தானா.

உள்ளமும் உணர்வுகளும்
ஒன்றான நினைவுகளால்
நிரம்பி வழிந்த காலங்கள்
யாவுமே மெய்தானா-இல்லை
பொய்யாகும் போன கனவு தானா

இரவும் பகலும் இறைநியதி
உறவும் பிரிவும் வாழ்வின் பகுதி
முத்தமும் யுத்தமுமாய்
வாழ்ந்த காலங்கள் உறவால்
உறுதியானது என்பதால் தானா

சண்டைபோட்டு பலநாள்
சந்தோஷமாய் உறவுகள் பலநாள்
உனக்கென நீயும் எனக்கென நானும்
வாழ்ந்த நாட்கள் யுகங்கள்
உண்மை அன்பு இது தானா.



கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# விசுவாவசு ஆடி சதயம்

சதயத்தில் பிறந்தேன்; சங்கடங்களே பெற்றேன் ;
சாதிக்க நினைத்தேன்; சருக்கியே விழுந்தேன்;
சரித்திரமென்னைப் பேசிடுமென சதாகாலமும் கனவுகண்டேன்!
சாந்தத்தைத் தேடினேன்; சாந்தியே கிடைத்தாள்;
சம்பாத்யமும் உயர்ந்தது! சொல்வாக்கும் பெருகியது;
செல்வாக்கும் கிடைத்தது!

சுக்கிரதிசை அகவை அறுபத்தைந்திலென
சாதகமெனுக்குச் சாற்றினாலும்
சாந்தியின் கரம்பிடித்த நாளிலேயே
சுக்கிரதிசை தொடங்கியது என்பேன்!
சுழலும் காலமுடன் சேர்ந்து சுழல்கிறேன் நானும்;
சுழல்கிறாள் சாந்தியுமென்னோடு என்பதால்!



தமிழாண்டு விசுவாவசுவில் தமியேன் பிறந்தேன்;
தாய்த்தகப்பனுக்கோர் ஆண்பிள்ளையாக,
தலைப்பிள்ளையாக இப்புவியில்;
ஏழரை சனீஸ்வரர் இரண்டாம் சுற்றிலிப்போது
என்னோடு வாசம் செய்ய ஓடின
ஆண்டுகள் ஐம்பத்தெட்டு, அவையெனுக்குத் தந்தன
அனுபவங்கள் ஒருநூறாயினும் ஏனோயெந்தன் கற்றல்
முடிந்தபாடில்லை இன்றுமிந்த பாழ்பட்ட அவனியிலே!

அடுத்துவந்திடும் குரோதியதையடுத் துவரும்விசுவா வசுவிலெனுக்கு
ஆடிசதயம் வந்திடவகவை அறுபதாகுமவ் வேளையிலும்
ஆடிக்காற்றில் பறக்கும் அம்மிபோலலைக் கழிக்கப்படுமோ
அடியேன்வாழ்வல் லதடியேனையது ஆடவைக்குமோ பாடவைக்குமோ
அறியேனடியேன் ஆயினுமெந்தன் சோமசுந்தரர் அருளால்
ஆடிப்பாடி உழைத்து வாழ்ந்திடப்பார்பேன் அடியேனே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம்,கோவில்பட்டி

# சர்க்கஸ்

சாகசங்கள் பலவற்றை
சாதித்துக் காட்டும்
அசகாயசூரர்களின் கூடாரமது
கோப்பைகள் பலவற்றை
காலாலே தலைமேலடுக்கி
கோலமுடன் கயிற்றின்மேல்
கோதையொருத்தி நடக்கிறாள்
ஒற்றைச்சக்கர வாகனத்தில்
ஒயிலாக வேறொருத்தி
குழந்தைகள் குதூகலிக்க
கோமாளியாகிறான் ஒருவன்
ஒற்றைச் சாட்டைக்கு பணிந்து
ஒழுங்காய் வருகிறது மிருகமும்
அரைச்சான் வயிற்றுக்காக
அரைக்கால் ஆடைகளுடன்
அந்தரத்தில் தொங்குகிறவளை
ஆரப்பரித்துக் காண்பது
அவளின் சாகசத்திற்கல்ல
அரைகுறையாகத் தெரிந்திடும்
அங்கங்களுக்காகவே.
கரணம் தப்பியால் மரணமாக
கூண்டுக்குள் வண்டியோட்டுவது
கால்வயிற்றுக் கஞ்சிக்காக
காசுகொடுத்துதானே
காண்கிறோமென
கைதட்டவும் மனமில்லாமல்
கஞ்சமாக இருந்திடுவர்
விலங்குவதை சட்டத்தால்
விலங்குகளுக்கும் இப்போது
விடுதலை விலக்களிக்கப்பட
விடையில்லா வாழ்வுடன்
விடியலும் என்றைக்கோ?



கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்

# உலக தாய்ப்பால் தினம் (01.08.2023)

உலகெல்லாம் வாழும் உயிர்களில்
பாலூட்டி இனங்களே அதிகமாக உள்ளனவே!
நான்கு கால்கள் கொண்ட விலங்குகள்
முதல், மனித இனமான நம் வரைக்குமே!
பிறந்த உடனே தாயின் பாலே உயிர் சக்தியாகுமே!
தாய்ப்பாலின் சிறப்பம்சம் ஏட்டில் வரைய முடியாது.
தாய்க்கும், குழந்தைக்கும் இடையே
அன்பையும், பாசத்தையும் ஒரு சேரக் கடத்துகிறது.
தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கு நோய்
எதிர்ப்பு சக்தி உண்டாகிறதே!
தாயின் உதிரமே தாய்ப்பாலாக மாறுகிறதே!
பிறந்த குழந்தைக்கு தேவையான
எல்லாசத்துக்களையும்
ஒருசேர கொடுப்பதே தாய்ப்பாலே!
என்னதான் விஞ்ஞானம் வளர்ச்சி
அடைந்திருந்தாலும், தாய்ப்பாலுக்கு
நிகரான ஒரு பொருள் இன்றளவும்
காணப்படவே இல்லையே!
தாய்க்கும், சேய்க்கும் இடையே ஆன
தாய்ப்பாலால் மட்டுமே
உணவு, அன்பு, நேசம், ஆகுமே!
குழந்தைக்கு, ஊட்டச்சத்தாக தாய்ப்பாலை
சிறந்து விளங்குகிறதே!
நாம் இன்றளவும் ஆரோக்கியமாக
இருப்பதே இறைவனின் மறு உருவமாக
காணப்படும் நம் தாயின் அன்பும்
அவள் தந்த அமிர்தமே!




கவிஞர் கிருஷ்ணவேணி.ஆ,ஊத்தங்கரை

# பேசாத மரங்கள்



பேசாத மரங்கள்
சொல்லும் கவிதை
அசைந்து பார்க்குது
சிலுசிலுத்த சிரிப்பில்

எந்நேரமும் நாணத்தில்
இலையாடைக்குள்
இடைப்புகும் ஒளியில்
தலையாட்டும் தளிரின் பச்சை

உயிருண்டு எனக்கென
தலையசைத்து நடனமிட்டே
காற்றும் மரமும் பேசும்
மொழியில்

சுற்றம் தாலாட்ட சொல்லாத
ஆரிராரோ
விழிமுடிடும் தானாக
விலையில்லாத வருடலில்

அடர்நீள நிழல்கூந்தல்
உணர்த்தலில்
பகலவனின் முத்த முயற்சியும்
முடிவில்லாத ஊடலும்

கைமடக்கிய மனிதமனங்கள்
நித்திரை சுவாசிப்பில்
விரட்டாமல் தலைகோதி
திறக்காத கண்ணிமைகள்

சொர்க்கம் எனும் சுகந்தம்
பிதற்றுவதில்லை மரம்
பெருமைக் கொள்ளாது
பேசாத மரமும்

கூட்டுக்குடும்பங்கள் அங்கே
குலாவும் விநோதப் பறவைகள்
கிளைகள் பரப்பி வாவென்று
அன்பில்

பழுத்த முதுமைகள் உதிர்ந்து
சரசரத்து
இறப்பு இங்கும் இயற்கையின்
அழகியல்

கரைந்தும் கலந்தும்
கவிமொழி பொழிந்து
தலைக்கணம் இல்லாத
தனித்துவம்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# தோள் வளையாதா(ழ்)ள்

தாழ்ந்தும் மடிந்தும்
தலை பாரம் கூடிப்போகும்
இயல்பியலில்.

தன் தாள் புதைத்து
எத்தோள் சேரும்
இக் காயம்


சிந்தாமணி
மென் கழுத்தில் சூடாமணி

வியக்கா இமை நுதல்
சிறுநகை சூடா செவ்விதழ்

செங் கன்னமிழைத்தும்
கோலமிடாத பாதவிரல்

எவரோ எப்பெயரோ
எதுவோ கொள்ளட்டுமென

தன்னுள் தனை புதைத்து
தலைகோதும் காற்றுடன்
தானும் இளைப்பாறும்!



கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# தாய் வீடு

எதிர்பாராத காய்ச்சலும் கூட
இனிதாகிடுதே;
தாய் வீட்டின் செல்ல மகள்
என்று ஆகிடும் போது;
தாய் ஒரு புறம்
பழச்சாற்றினைத் தந்து
உபசரிப்பதும்;
தங்கை ஒரு புறம்
நெற்றிக்கும் முதுகுக்கும்
தைலம் பூசி விட;
தந்தையோ;
அண்ணனோ;
தம்பியோ
யாராகினும் மருத்துவர்
ஆலோசனைக்காய்
உடன் இருக்க;
என் ஒருத்தியின்
காய்ச்சலுக்காய் வீடே
அமைதி காத்து
நொடிக்கு ஒரு
நல விசாரிப்புடன்
அருகே இருக்கையில்
எந்தக் காய்ச்சல்
வந்து என்னை
என்ன செய்து விடும்
என்று கம்பீரமாக
போர்க்கொடி உயர்த்துவேனே
நானும் ;
பி.கு - காய்ச்சலை எதிர்த்து



கவிஞர் மலர் அபி


# மெட்டி ச(மு)த்தம்

தொட்டு நடந்த தேகம்
தொட்டு தொட்டு
பேசிய நிழல்.

காதல் ஊற்றாய்
காதலியே நீ இருக்க
கவலை மறந்தேன்

காலனே வந்தாலும்
ஏனடா வந்தேனென
தனையே இகழ்வான்

கண்மணிகள்
கவலைதீர
வாழ்கிறதென.
நம் கால்விரல்
அழுந்தா நடையில்
நமை கணிப்பான்



எத்தனை
எத்தனை
முத்தம் தருவேன்
எண்ணிக்கை
கணக்கில்
இல்லையடி கண்ணே

ஒரே முத்தம் வாங்கி
வந்தேன்
பட்டினி கிடந்த
இரவின் கவிதை
செல்லமே!

கவிஞர் ஆர்.மோகன்ராஜ்,சென்னை

# என்றும் நீதான்

மறைந்தாலும்
மறைத்தாலும்
மடிந்தாலும்
மாய்ந்தாலும்
மாயாத நாள் வரை
மாயும் நினைவுகளும் நீதான்.

மீதமுள்ள கண்ணீரிலும்
மீட்கும் காதலும் நீதான் !
மீளா துன்பங்களிலும்
மீண்ட மௌனங்களும் நீதான் !

முயலா முயற்சிகளிலும்
முயன்ற நம்பிக்கைகளும் நீதான் !
மயங்கிய விழிகளுக்குள்
மயங்காத மொழிகளும் நீதான் !

என்றும்
என்றென்றும்
என்னுள் நீதான்
என் நினைவுகளும் நீதான்.



கவிஞர் சந்தியா பாவலன்,வேலூர்

# கண்ணீரின் வலி

கண்ணோடு கண் பார்த்து
கதை பேசும் கருவிழிகள்
மௌனத்தால் மனதை அறியும்
மாய கண்ணாடி தான் இருவிழிகள்

இன்பத்திலும் துன்பத்திலும்
இணைந்தே இருக்கும்
காத்திருக்கும் தருணத்தில்
கண்ணீரும் இனிக்கும்.

ஆழ்மனதில் அசைப்போட்ட
நினைவுகளின் சங்கமத்தில்
அணை போட்டு தடுத்தாலும் நிற்காது.



அன்பின் நீர் ஊற்று
அழைப்பின்றி அலைமோதும்
அவசரமாய் வெளியேறும் கண்ணீரும்
வேடதாரி என்றே பழியுரைக்கும்.

சுடு சொல்லில் என்றும்
சுயத்தை இழக்காது.
கோபமும், ஆதங்கமும் இரண்டறகலந்தே
இதயத்தை துளைக்கும்.
இறுதியில் மௌன மொழியே
ஆட்சி செய்யும்.

கடைசி நிமிடம் கண்மூடியே
தவம் இருக்கும்.
காணாத முகமும் கண்ணெதிரே நிழலாடும்.
கடைக் கண்ணில் வழிந்தோடும்
கண்ணீரும் புதிராகும்
வலி கண்ட இதயத்தின் உள்ளே
விடையறியா இந்த விழி நீர்.

கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

# சேக்கிழார் (தொடர்ச்சி–2)

சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணமது தில்லைதனில்
ஆயிரங்கால் மண்டபத்தே சித்திரைதன் திருவாதிரை
நாள்தொடங்கி அடுத்தவாண்டுஅதேநாளில் ஓராண்டு
காலத்தே நிறைவுற்றது! அறுபதின்மர் தன்னோடு
சுந்தரரும் அவர்பெற்றோர் சடையனாரும் இசைஞானி
மூவரொடு அறுபத்து மூவரதில் அமைந்தனரே!
பெரியபுரா ணந்தனிலே பனிரெண்டு திருமுறைகள்
காண்டங்கள் இரண்டினிலே சருக்கங்கள் பதின்மூன்றில்
பாடல்கள் நான்காயிரத் திருநூற்று எண்பத்து
ஆறமைவே! மன்னன்செய் சிறப்பதுவோ: சேக்கிழார்க்கு
பட்டத்து யானைமேல் பவனியொடு மன்னனவன்
கவரியது வீசினனே! புராணமதும் அப்பவனி
கண்டதுவே! புராணத்தைச் சிவபெருமான் என்றெண்ணி
அடியார்கள் பின்தொடர்ந்து அணிவகுப்பு கண்டனரே!
சேக்கிழார்தாம் தோன்றியநல் குன்றத்தூர் அமைந்துள்ள
சென்னையது: தெற்கதனில் திருவொற்றியூர், வடதிசையில்
திருவான்மியூர்; கிழக்கினிலே திருமயிலை; மேற்குபக்கல்
பெரும்பூதூர் சூழ்ந்ததுவே! நாயன்மார் குழாத்திடையே:
அருள்ஞானி வேந்தராதி வேடுவர்கள் ஜாதிகீழ்மேல்
காணாதே; பக்திக்கே முதன்மையது கண்டனரே!
முதன்மையாம் புராணங்கள் மூன்றுண்டு: "கந்தபுரா
ண"மதோடு; "திருவிளையா டல்புராண " மற்றமைந்த
"பெரியபுரா ண" மென்றிடுவர்! சேக்கிழார்தாம் யாத்ததுவே:
தனித்தமிழ்நூல் மாண்படைப்பு! முதல்நூலோ சுந்தரர்தம்
"திருத்தொண்டத் தொகை" யதுவே! வழிநூலாய் நம்பியாண்டார்
நம்பிதனின் "திருத்தொண்டர் திருவந்தாதி" யமைந்தது!
தனியடியார் அறுபத்து மூவரொடு;தொகையடியார்
ஒன்பதின்மர்; வரலாற்றின் நற்றொகுப்பே சேக்கிழார்தம்
பெரியபுரா ணப்பேரமை நாயன்மார் தம்வரலாறே!
பேராழி நீர்மூழ்கி; முத்தெடுத்து மகிழ்வோமே!




கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# நான் நீ நாம்

அன்பென்ற அழகுதனை
ஆதாரமாக்கி
இசையாய் வருடும் சொற்களிலே
ஈன்றவளின் பாசமாகி
ஊணாகி உயிராகி
என்னவன்(ள்) என்றுமாகி
ஐயன் வள்ளுவனின் இருவரிக் கவிதையாகி
ஒற்றுமையின் மறுபிறப்பாய் நாமாகி
ஓதிடுவோம் காதலுடனே களித்திட
ஔசிதமாய் வாழ்ந்திட வேண்டும் பிறர் மெச்சிட!

நான் நீ நாமாகிட
நாள்தோறும் வேண்டுதல்தான்
இறைவனிடத்தே!



கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# கொட்டடா பேரிகை

புரட்சியோடு இளைஞரணி
புத்துயிர்பெற்றுத் திரண்டிட
அதிகாரத் தோரணையை
அடியோடு அறுதெறிந்திட

அறத்தை விதைத்து
அட்டகாசம் அகற்றிட
மறத்தோடு எழுந்து
மறத்தமிழனாய்த் துளிர்த்திட

பேதங்கள் களைந்து
பேரிடர் போக்கிட
பெண்மையை மிதிப்பவன்
கொட்டத்தைக் கொளுத்திட

மடமை போக்கி
மனிதநேயம் வளர்த்திட
கடமை செய்து
கன்னியமாய் வாழ்ந்திட



வன்மத்தைத் துரத்தி
வளத்தைப் பெறுக்கிட
இன்பத்தை அழைத்து
இதயம் மகிழ்ந்திட

பண்பாடு காத்து
பரவசம் கொண்டிட
சண்டைகள் இல்லாத
சமுதாயம் உருவாகிட

உழவை உயிராய்
உழற்று பயிறாக்கிட
கல்வி ஓங்கி
கற்றல் தொடர்ந்திட

தமிழின் பெருமை
தரணியில் சங்காய்முழங்கிட
கொட்டடா பேரிகை
எத்திக்கும் அதிரட்டும்

கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி

# பேருந்து நிலையத்தில்

கட்டி முடித்திடாத கட்டிடத்திற்கு
அஞ்சு ரூபாயாம் கட்டண கழிப்பறை
அதுவும் இருந்தும்
மூலையின் ஓரமாய்
இன்னும் நனைந்து கொண்டே கிடக்கின்றது
ஒற்றை சுவர் ஒன்று.
கணக்கில் அடங்கா கூட்டத்திற்கு மத்தியில்
காளான் விற்பனையும் சூடுப்பிடிக்கின்றது.
ஆனால் என்னவொன்று
காளானுக்கு குடைதான் பிடிக்க ஆளு இல்லை.
சாக்கடை நாற்றம் ; தூர்வாரிட ஆளும் இல்லை.
தூர்வாரி விட்டு சென்றவனுக்கு துளியும் மதிப்பில்லை.
விட்டு சென்றவன் திரும்பி வருவான் என்று
ஒருத்தி கண்ணீர் துளிகளோடு காத்துக் கிடக்கின்றாள்.
கண்ணீர் துளிகளின் ஈரம் மட்டுமே அழுது அழுது
அங்கே காய்ந்துக் கொண்டு இருக்கின்றது.
கனவுகளை சுமந்த பயணத்தின் தொடக்கம் ஒரு பக்கம்.
கனவுகளை எல்லாம் தொலைத்த விட்டு
அலைந்திடும் பயணம் மறுபக்கம்.



கவிஞர் ரமேஷ்யோகி

# பிரியமான தோழி

அவளின் நினைவு
நினைவு எல்லாம் நீ இருக்க
மறக்க முடியாமல் நான் தவிக்க
இடையில் தனிமை என்னை சுட்டு எரிக்க
உன் இதயத்தில் நான் சிறை பிடிக்க
அந்திமாலை வந்து இருக்க
என்னவள் எங்கு இருக்க
உன் புன்னகையில் நான் பூத்து இருக்க
மனதில் உன்னை நான் ரசிக்க
வான் மேகம் தூது இசைக்க
இதய துடிப்பில் நீ கலந்து இருக்க
காதலின் அவஸ்தை தெரிகிறது
அதுவும் சுகமாய் இருக்கிறது
காலம் நம்மை பிரிக்கிறது
காதல் நம்மை இணைக்கிறது



கவிஞர் சௌ.தாரா,சேலம்

# தூரிகையால் உளம்கவர்ந்த ஓவியர் மாருதி!

இயற்பெயர் அரங்கநாதன்! சூடியபெயர் மாருதி!
புதுக்கோட்டையில் தோற்றம்! படிப்பில் இல்லை நாட்டம் !
சிறுவயது முதலே ஓவியத்தில் நாட்டம்!
அக்கம் பக்கத்து வீடுகளில் இரவலாகப்பெற்ற
பத்திரிகை, இதழ்களில் இடம்பெற்ற ஓவியங்களைப்
படியெடுத்து வரைந்து, பயின்ற ஏகலைவன்!
நோக்கும் முகங்களை தன் நினைவடுக்குகளில்
தேக்கிவைக்கும் ஆற்றல்! கதைகளில், கவிதைகளில்
சூழலுக்கேற்ப ஒருமுகத்தைத் தூரிகையில் தரவல்ல
ஆழ்ந்த புலமையைப் பெற்றிருந்தாரே! ஓவியம்
எழுதுவது என்றுரைப்பார்! கையெழுத்தும் ஓவியமே!
மூத்த ஓவியர் ஆர் நடராசனிடம் நுட்பங்களைக் கற்றாரே!
பாத்திரங்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் ஆற்றல்!
சூழலை உணர்த்துகின்ற சூட்சுமம் அதிலிருக்கும்!
வாசகர் உள்ளங்களை வசீகரித்த ஓவியர்!
குமுதம், கல்கி, சுதேசமித்திரனில் கதைகளுக்கு
மாத நாவல்களுக்கு, சிறப்பு மலர்களின்
அட்டைப் படங்களுக்கு அவரின் ஓவியங்கள்
படைப்புகளுக்கு உறுதுணையாய் பரிமளித்து மிளிர்ந்தனவே!
நாடகத்தில் ,திரைத்துறையில் ஆடை வடிவமைப்பிலும்
இடம்பிடித்து, ஈட்டினார் நற்பெயரை! வேலு நாச்சியார்
நாடகமும், உளியினோசை, பெண்சிங்கம் திரைப்படங்களில்
ஆடை வடிவமைப்பு வெளிப்படுத்தும் இவர் திறனை!!
கண்மணி உள்ளிட்ட மாத நாவல்களில்
பெண்களை மையமாகக் கொண்ட கதைகளுக்கு
இன்னும் மெருகூட்டின இவரின் ஓவியங்கள்!
அகவை எண்பத்தைந்தில் ஜூலையில் மறைந்தாலும்
சாகாவரம் பெற்ற ஓவியங்களில் வாழ்ந்திடுவார் !



**கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி**

# கனிந்த பழங்கள்

தள்ளு வண்டியில் விற்கும்
நாவல் பழம்
என்ன விலை
என்று கேட்டதும்,
கால் கிலோ
ஐம்பது ரூபாய் என்று சொன்ன வியாபாரியிடம் ,
கொடுங்கள் என்று சொன்னதும்
கால் கிலோவை விட அதிகமாகவே கையில் எடுக்கிறார்
எடை அதிகமாகவே பழங்கள்
இருந்தாலும்
ஆழ் மனது சொல்கிறது
தன் கைகளால் கொடுத்தப் பழத்தை
அவர் திரும்ப எடுக்கமாட்டார்
அதுதான் நிகழ்கிறது
அந்த அதிகமான எடையுள்ள
பழங்களில் அவரின்
கருணையும்
கொஞ்சம் கலந்திருக்கிறது.



கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# டேனியல் கவிதைகள்

அகண்டு போகும் இடத்திலும் அவள் இல்லை,
அகற்றிவிடும் பொருளாகவும் அவளில்லை.
ஏனோ அவள் அப்பிக்கொண்டே இருக்கிறாள் இன்றும்.

வேண்டும் என தவிர்ப்பதும்
வேண்டாம் என அழைப்பதும்
காதலில் மட்டுமே சாத்தியம்

உன் கடை விழியோடிய
என்னிதயமும்,
உன் கணுக்கால் கீழ்படுமிடமோடிய
என் பார்வையும், இனிதெனவுனை தேடுதடி.



கவிஞர் மரு.சு.டேனியல் ராஜ சுந்தரம்,வீரிருப்பு,சங்கரன்கோவில்

# சுவாமி சகஜானந்தா

## சிறப்பு



கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் கடந்த 100 ஆண்டுகளுக்கு முன்பு இப்பகுதியில் உள்ள அடித்தட்டு ஏழை மக்கள் அழியாத கல்வியால் மட்டுமே முன்னேற முடியும் என கருதி கல்வி நிறுவனங்களையும் நிறுவி பல்லாயிரக்கணக்கான ஏழை பட்டதாரிகளை உருவாக்கியவர் சுவாமி சகஜானந்தா.

## பிறப்பு

சுவாமி சகஜானந்தா அவர்கள் தற்போதைய இராணிப்பேட்டை மாவட்டம் திமிரி ஒன்றியம் , ஆற்காடு வட்டத்திலுள்ள மேல் புதுப்பாக்கத்தில் (ஆரணியிலிருந்து 20 கல் தொலைவு) பிறந்தார் (1890) அடுத்துள்ள . பட்டியல் இனத்தில் பிறந்த இவரது இயற்பெயர் முனுசாமி. குழந்தைப் பருவத்திலிருந்தே ஆன்மிக விஷயங்களில் ஆர்வம் இருந்தது. சொந்த ஊரில் தொடக்கக் கல்வியை முடித்தார். இளம் வயதிலேயே அவருக்கு பிரம்மச்சாரியத்தில் நாட்டம் இருந்ததால், பெண்களைக் கண்டால் நிமிர்த்துகூட பார்க்கமாட்டார்.

## படிப்பு

திண்டிவனம் அமெரிக்கன் ஆற்காடு கிறிஸ்தவ உயர்நிலைப் பள்ளியில் பயின்றார். ஒரு சில மாதங்களிலேயே பைபிளை மனப்பாடமாக ஒப்பித்தார். பள்ளி நிர்வாகம் 'சிகாமணி' பட்டம் வழங்கியது. சில நிபந்தனைகளின் பேரில் படிப்புக்காக அமெரிக்கா அனுப்புவதாகக் கூறியது நிர்வாகம். அவர், அதை மறுக்கவே 8-ம் வகுப்பில் பாதியிலேயே பள்ளியிலிருந்து வெளியேறும் நிலை ஏற்பட்டது.

# சுவாமி சகஜானந்தா

## ஆசான்கள்



சுவாமி சகஜானந்தா அவர்கள் வ உ சி சிதம்பரம் பிள்ளையிடம் திருக்குறளையும் , திரு வி கல்யாணசுந்தரம் அவர்களிடம் தமிழ்மொழி இலக்கணங்களையும், திருவரங்கத்திற்கு சென்று பிரதிவாதி பயங்கரம் சீனிவாசாச்சாரி அவர்களிடம் வடமொழியான சமஸ்கிருதம் கற்றுத்தேர்ந்தார்

குடும்ப வறுமையால் படிப்பை விட்டுவிட்டு, பெற்றோருடன் கர்நாடகத்தில் உள்ள கோலார் தங்கவயலுக்குச் சென்று கூலி வேலை செய்யத் தொடங்கினார். பல ஆன்மிக நூல்களைக் கற்றார். மாலை வேளைகளில் நீலமேக சுவாமிகள் என்பவரின் ஆன்மிகச் சொற்பொழிவுகளைக் கேட்டார்.அவருடன் பல கோயில்களுக்குச் சென்றார். ஆனாலும் ஆலயத்துக்குள் நுழைந்து தெய்வ தரிசனம் செய்ய இவருக்கு அனுமதி கிடைக்கவில்லை. அங்கிருந்து காஞ்சிபுரம் வந்து தட்சிண ஸ்வாமி என்பவரிடம் பல ஆன்மிக விஷயங்களைக் கற்றார்.

## சுவாமி சகஜானந்தர்

பின்னர், வியாசர்பாடியில் இருந்த கரப்பாத்திர சுவாமிகளின் குருகுலத்தில் சேர்ந்தார். அவரே தன் சீடருக்கு (முனுசாமிக்கு) 'சுவாமி சகஜானந்தர் என்ற பெயரை சூட்டினார். 1910ம் ஆண்டில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு சேவை செய்வதற்காக சிதம்பரத்துக்கு இவரை குரு அனுப்பி வைத்தார். சமூக நலனில் அக்கறை கொண்ட அனைத்து சமூக மக்களும் இவருக்கு உதவினர். பணமாகவும், நிலமாகவும் தானம் வழங்கினர்.

# சுவாமி சகஜானந்தா



1911-ல் தமது மடத்திலேயே மூன்று மாணவர்களைக் கொண்டு ஒரு திண்ணைப் பள்ளியை தொடங்கி, தம் சமுதாயத்தின் தலை எழுத்தை மாற்றி எழுத தொடங்கினார். 1916-ம் ஆண்டு நந்தனார் கல்விக் கழகத்தைத் தொடங்கினார். இலங்கை, பர்மா, ரங்கூன், மலேசியா, சிங்கப்பூர் சென்று உரையாற்றி நிதி திரட்டினார்.

1929-ல் மாணவர் இல்லம், 1930-ல் மாணவியர் விடுதியையும் தொடங்கினார். அப்படி தொடங்கப்பட்ட பள்ளி தற்போது நந்தனார் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, நந்தனார் அரசு பெண்கள் பள்ளி, அரசு நந்தனார் தொழில்கல்வி நிலையம் ஆகியவையாக பல்கி பெருகியுள்ளது.

இந்தப் பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகள் பல்லாயிரக்கணக்காவர்கள் படித்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியில் உள்ளனர்.

தனது சமூக மக்களின் நலனுக்காக அரசியலிலும் ஈடுபட்டார். சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட்டு வென்றார். ஏறக்குறைய 34 ஆண்டுகள் சட்டப்பேரவை உறுப்பினராக செயல்பட்டார். தன் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமைகளையும் நிவாரணங்களையும் பெற்றுத் தந்தார்.

இவரது அயராத முனைப்பாலும் மற்றும் பலரது போராட்டங்களாலும் 1947-ல் அனைவரும் ஆலயத்துக்குச் சென்று வழிபடலாம் என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டது.

# சுவாமி சகஜானந்தா

**மறைவு**

விளிம்பு நிலை மக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்ட சுவாமி சகஜானந்தர், 1959-ம் ஆண்டு 69-வது வயதில் மறைந்தார். இவருக்கு தமிழக அரசு சார்பில் அவர் வாழ்ந்த இடமான நந்தனார் ஆண்கள் பள்ளிக்கு எதிரே மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

வீரர்க் கழகுதரும் காயம் மெலிந்திடுதல்
மாதர்க் கழகுதரும் மாநோன்பால் - ஈவோர்
கொடுத்ததனால் நல்குரவைக் கொண்டால் அழகே
அடுத்தஇதைமைக் காப்ப தழகு.
(நேரிசை வெண்பா - சுவாமி சகஜானந்தா)

நன்றி :
https://www.hindutamil.in/news/tamilnadu/630771-swamy-sagajanandha-2.html

தமிழ் - தமிழர் நலனில் - சுவாமி சகஜானந்தர் பணிகள் - பேரா.அன்பானந்தன்


அகர முதல
நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
அழகு நம்மை ஆளக் கூடாது..
அறிவுதான் ஆளவேண்டும்..
அவசரம் நம்மை ஆளக்கூடாது..
நிதானம் தான் நம்மை ஆளவேண்டும்
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com